செய்தி வெளியீடு எண். 103 நாள்: 16.02.2018

## விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.02.2018) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது :

திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை நெற் பயிரில் மொத்தம் 84,917 ஹெக்டெரும், திருந்திய நெற்பயிரில் 57,061 ஹெக்டெரும். சிறுதானியங்கள் 883 ஹெக்டேரும், பயறுவகைகள் 8,261 ஹெக்டேரும், எண்ணைய்வித்துக்கள் 7,632 ஹெக்டெரும், கரும்பு நடவு 603 ஹெக்டேரும், மறுதாம்பு 5,043 ஹெக்டேரும் பயிரிடப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு மாதம் முடிய நிகர பயிர் சாகுபடி பரப்பு 1,07,339 ஹெக்டெர் ஆகும்.

2017-ம் ஆண்டில் தென்மேற்கு பருவ மழை 23 சதவிகிதம் மற்றும் வடகிழக்கு பருவமழை இயல்பை விட 13 சதவிகிதம் அதிக அளவில் மழை பெறப்பட்டுள்ளது. பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் 30.11.2017 முன் காப்பீடு செய்த விவசாயிகளில் விடுபட்ட 8000 விவசாயிகளில் மப்பேடு கிராமத்திற்கு ஒரு வார காலத்திற்குள் ரூ. 48 இலட்சம் வழங்கப்படவுள்ளது. விவசாயிகளுக்கு நேரடி உரமானியம் சென்றடையும் வகையில் நேரடி உரமானிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, அதனை அனைத்து விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். கால்நடைத்துறையின் மூலம் வழங்கப்படும் மானியம் ரூ. 20 ஆயிரம் பெற்று HYDROPHONIX (கால்நடை தீவனம்) தயாரித்து பால் உற்பத்தியை பெருக்கி பயன் அடைய வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

அட்மா திட்டத்தின் கீழ் விவசாய சுற்றுலா செல்ல சுழற்சி முறையில் அனைத்து விவசாயிகளுக்கும் அளித்தல், பிரதம மந்திரி காப்பீட்டு திட்டத்தின்கீழ் காப்பீடு செய்து காப்பீடு தொகை பெறாத விடுபட்ட விவசாயிகளுக்கு இழப்புத் தொகை வழங்கவும், புதியதாக பயிர்கடன் கோரும் விவசாயிகளிடம் பிற வங்கிகளில் இருந்து கடன் இல்லாச்சான்று கேட்பதை தவிர்த்தல் இறால் மற்றும் வண்ணமீன் பண்ணைகளை அகற்றவும், நீர் ஆதாரங்காளான ஏரி, குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் மற்றும் நிர்வரத்துக்கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், தடுப்பணை கட்டுதல், வரத்துக்கால்வாய், ஏரி குளங்களை சீர் செய்தல், விவசாயிகளின் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் அளிக்கப்படும் மனுக்களுக்கு உரிய பதில் அளித்தல். இலவச மின்சாரம் வழங்குதல் கிராம நிர்வாக அதிகாரி காலிபணியிடங்களை நிரப்பதல் மற்றும் அவர்களுக்கு அலுவலகம் கட்டித்தருதல் உள்கட்டமைப்பு வசதி செய்து தருதல், நேரடி கொள்முதல் நிலையம் அமைத்தல் போன்ற கோரிக்கைகளை விவசாயிகள் முன்வைத்தனர்.

பின்னர், கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளுடைய கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து 100-க்கும் மேற்பட்ட மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை)(பொ) திரு.பிரதாப ராவ், மேலாண்மை துணை இயக்குநர் (மத்தியதிட்டம்) (பொ) திரு.வி.எபினேசன், வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) (பொ) திரு.எம்.ராகவேந்திரா ராவ், பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் திரு.வெ.முத்துசாமி, அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**